**திருவேற்காடு நகராட்சி**

**சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்**

திருத்திய 1920ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் அட்டவணை ஐஐஐ விதி 2(1) ன் கீழ் திருவேற்காடு நகர் மன்றத்தின சிறப்புக் கூட்டம் திருவேற்காடு நகர் மன்ற கூடத்தில் **11.04.2023–ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு திரு. E.கிருஷ்ணமூர்த்தி நகர்மன்ற தலைவர்** அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் கீழ்கண்ட பொருள் பரீசீலனைக்கு வைக்கப்பட முடிவுசெய்யப்பட்டது.

**நகர்மன்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்**

பொருள் எண்.1

திருவேற்காடு நகராட்சி அரசாணை (நிலை) எண்.154, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (ஆ.ஹ.5) துறை, நாள்.09.08.2010–ல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. இந்நகராட்சியின் பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டரில் 18 நகரமன்ற உறுப்பினர்களுடன் செயல்பட்டு வரும் தேர்வு நிலை நகராட்சியாகும்.

மேலும், திருவேற்காடு நகராட்சியின் கீழ் 14 பள்ளிகளும் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளும் 18 தனியார் பள்ளிகளும் இயங்கி வருகின்றனர். 7 நுண்ணுயிர் குழிகள் மற்றும் 10 டீஊஊ அமையபெற்றுள்ளது. மேலும் பெங்களூரிலிருந்து சென்னை மார்க்கம் செல்லும் முக்கிய பிரதான சாலையாக இந்நகராட்சி அமைந்துள்ளது.

மேலும் இந்நகரை ஒட்டி உள்ள பல்வேறு வணிக நிறுவனங்களும் மற்றும் தொழிற்சாலைகளும் இயங்கி வருவதால் இந்நகருக்குள் 15000க்கும் மேற்பட்ட பொது மக்கள் (குடடியவலைபே ஞடியீரடயவடிே) வந்து செல்கின்றனர். வணிக நிறுவனங்களும் மற்றும் தொழிற்சாலைகளும் இயங்கி வருவதால் இந்நகராட்சியின் சொத்துவரி மற்றும் தொழில்வரிகள் உயரும் நிலையில் உள்ளதால் நகராட்சிக்கான போதிய வருமானம் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நகராட்சியின் நிலத்தின் மதிப்பு கூடுதலாக உயர வாய்ப்பு உள்ளத. மேலும் நகராட்சிக்கான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் உயர வாய்ப்புள்ளது.

இந்நகராட்சி வளர்ந்து வரும் சூழ்நிலையை அடிப்படையாக கொண்டு அரசாணை(நிலை) எண்.113, நகராட்சிநிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் ஆஹ–5(2) துறை, நாள்.30.08.2019ல் குறிப்பிட்டுள்ளவாறு தற்போது தேர்வு நிலை நகராட்சியாக இயங்கி வரும் இந்நகராட்சியினை சிறப்புநிலை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு போதிய வருமானமாக 2022–23–ம் ஆண்டில் ரூ.18.06 கோடியாக உள்ளதாலும், நடப்பு சராசரி மக்கள் தொகை 116214 உள்ளதாலும் திருவேற்காடு நகராட்சியை சிறப்புநிலை நகராட்சியாக தரம் உயர்த்த தேவையான ஆண்டு வருமானம் ரூ.36.45 கோடிக்கு மேல் உள்ளதாலும் தரம் உயர்த்துவதற்கான அனைத்து வசதிகளும் உள்ளதாக கருதப்படுகிறது. மேற்கூறிய விளக்கங்களை கருத்தில் கொண்டு இந்நகராட்சியை தேர்வுநிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்த அரசுக்கு கருத்துருவை அனுப்பி வைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

திருவேற்காடு நகராட்சியின் வளர்ச்சியை கருத்தில் கொண்டும் எதிர் வரும் காலங்களில் மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து பெறப்படும் மானியங்கள் மற்றும் நலதிட்டங்களை கூடுதலாக பெறும் பொருட்டும், அரசாணை(நிலை) எண்.113, நகராட்சிநிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் ஆஹ–5(2) துறை, நாள்.30.08.2019ல் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் இந்நகராட்சி பூர்த்தி செய்துள்ளதை கருத்தில் கொண்டும் தேர்வு நிலை நகராட்சியிலிருந்து சிறப்புநிலை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்கான கருத்துருவை அரசுக்கு அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1702/2023/சி1)

---

தீர்மான எண்.379அனுமதி அளிக்கப்படுகிறது,

ஓம்/–. E. கிருஷ்ணமூர்த்தி
நகர்மன்ற தலைவர்,
திருவேற்காடு நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்

திருவேற்காடு நகராட்சி